மறைமலைநகர் நகராட்சியில் 31.12.2018–ந் தேதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.

| பொருள் எண் | தீர்மான எண் | நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரம் |
|---|---|---|
| 1 | 609 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 2 | 610 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 3 | 611 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 4 | 612 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 5 | 613 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 6 | 614 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 7 | 615 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 8 | 616 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 9 | 617 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 10 | 618 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 11 | 619 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 12 | 620 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 13 | 621 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 14 | 622 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 15 | 623 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |
| 16 | 624 | அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது. |

மறைமலைநகர் நகராட்சியில் 31.12.2018–ந் தேதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.

## பொருள் எண்.01

மறைமலைநகர் நகராட்சி எல்லைக்குட்பட்ட செங்குன்றம் கிராமம் புல எண்.166/1–ல் அமைந்துள்ள நரசிங்கபுரம் காலனி பகுதியானது 1963–ம் ஆண்டில் மனைப்பிரிவாக உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது அனுமதியற்ற மனைப்பிரிவின் கீழ் அமையும் மனைகளை வரன்முறைப்படுத்திட, நகர்புற வளர்ச்சி துறை (UD 4(3)) தனது அரசாணை நிலை எண்.172. நாள்.13.10.2017 ல் வரிசை எண். 4 ல் விதி எண். 8 ல் சென்னை பெருநகர வளர்ச்சி குழும எல்லைக்கு வெளியே உள்ள நகர்ப்புற பகுதிகளில் 01.01.1980 க்கு முன்னர் ஏற்படுத்தப்பட்டுள்ள மனைப்பிரிவுகள் அனைத்தும் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகளாக கருதப்படும் எனவும், அம்மனைப்பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் பொதுத் திறவிடங்கள் ஆகியவற்றினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுக்கே சொந்தமாக்கி கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் மனைப்பிரிவில் உள்ள சாலைகள் அனைத்தும் நகராட்சிக்கு சொந்தமாக கருதிக்கொள்ளலாம். மனை எண்.54 ன் பொது அதிகார முகவர் திரு. U.புருசோத்தமன் என்பவர் தனது மனையின் ஒரு பகுதியினை மேற்காணும் மனைப்பிரிவிற்கு அணுகு பாதையாக மாற்றிக் கொள்ள நகராட்சிக்கு தானம் வழங்க சம்மதித்துள்ளார். உத்தேச மனையானது தனி நபர் பெயரில் பட்டாவாக உள்ளதால், மனை எண்.54–ன் தெற்கு பகுதியான 52 அடி நீளமும், 16 அடி அகலமும் கொண்ட சாலையானது தானப்பத்திரம் மூலம் இடத்தின் உரிமையாளரால் இந்நகராட்சிக்கு தானம் வழங்கப்பட்டால் மட்டுமே அதனை நகராட்சி சாலையாக அங்கீகரிக்க இயலும். எனவே உத்தேச இடத்தினை மறைமலைநகர் நகராட்சியின் பெயருக்கு மாற்றம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

<u>அலுவலக குறிப்பு</u>:-
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண். 609 நாள்.31.12.2018**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஒம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 31.12.2018–ந் தேதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.**

## பொருள் எண்.02

மறைமலைநகர் நகராட்சி 21 வார்டுகளில் 3,4,5,6,7,8 (பகுதி) வார்டு பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தின் கூட்டு குடிநீர் திட்டம் மூலம் நாள் ஒன்றுக்கு 25 இலட்சம் லிட்டர் வழங்கப்பட்டு 4271 குடிநீர் வீட்டு இணைப்பு மற்றம் வணிக வளாகங்களுக்கு தினசரி குடிநீர் 90 LPCD வீதம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் 21 வார்டு பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீர்ஆதாரங்கள், 56 சிறிய மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த 21 வார்டு பகுதிகளில் 14907 குடியிருப்புகள் உள்ளன. இக் குடியிருப்புகளுக்கு தற்போது குழாய் வாயிலாக நீர் விநியோகம் செய்யப்படுகிறது, 86 பொது கிணறுகள் மற்றும் 185 மின்விசை இயந்திரங்கள் மூலம் பொதுக் குழாய்களின் வாயிலாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. (Piped water supply to premises) இக் குடியிருப்புகளுக்கு குழாய் வாயிலான நீர் விநியோகம் செய்வது மிக அவசியமானதாகும்.

இந்த குடியிருப்புகளுக்கு குடிநீர் வீட்டு இணைப்புகள் நகராட்சி மூலம் வழங்கி வைப்பு தொகை, கட்டமைப்பு கட்டணம் ஆகிய கட்டணங்களை வீட்டு உரிமையாளர்களிடமிருந்து நகராட்சி மூலம் வசூல் செய்யலாம். இவ்வகை இணைப்பு வழங்குவதால் நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் கட்டமைப்பு வசதி அமைக்கப்பட்டு குடிநீர் வழங்கும் பொருட்டு சிப்பம் – I–ல் வார்டு எண்.1,2 முழுவதும், 3,4,5,6,7,8 பகுதி, மற்றும் 9 முதல் 12 வரை உள்ள 6753 குடியிருப்புகளுக்கு தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு தொகை ரூ.265.00 இலட்சம் ஆகும்.

சிப்பம் II –ல் வார்டு எண்.13 முதல் 21 வரை உள்ள 8154 குடியிருப்புகளுக்கு தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீடு 320.00 இலட்சம் ஆகும். இப்பணிகளை பொது நிதி அல்லது அரசு திட்ட நிதியில் மேற்கொள்ள சிப்பம் I –ல் உள்ள பணிக்கு இந்நகரமன்ற தீர்மான எண்.321 நாள்.03.04.2018–ல் நகரமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது, மேலும் சிப்பம் II–ல் உள்ள பணிக்கு இந்நகரமன்ற தீர்மான எண்.322 நாள்.03.04.2018–ல் நகரமன்ற அனுமதி பெறப்பட்டுள்ள நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல் முறைகள் கடித ந.க.எண்.13277/2018/WS1 நாள்.19.06.2018 தேதிய கடிதத்தில் சிப்பம் I –ல் உள்ள பணிக்கு ரூ.265.00 இலட்சமும் சிப்பம் II –ல் உள்ள பணிக்கு ரூ.320.00 இலட்சமும் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் Tamil Nadu Urban Finance and Infrastructure Development Corporation Limited அவர்களின் Loan Sanction letter no.TUFIDCO/URF 1819–4 ULB's/AM (M)/2018 நாள்.07.12.2018 தேதிய கடித உத்திரவில் ரூ.498.10

இலட்சத்திற்கு மேற்கண்ட இரு பணிகளுக்கும் வட்டியில்லா கடன் வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

எனவே சிப்பம் I –ல் உள்ள மதிப்பீட்டு தொகை ரூ.265.00 இலட்சம் மற்றும் சிப்பம் II –ல் உள்ள மதிப்பீட்டு தொகை ரூ.320.00 இலட்சம் சேர்த்து மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.585.00 இலட்சத்தில் Tamil Nadu Urban Finance and Infrastructure Development Corporation Limited அவர்களின் நிதி ஒதுக்கீடு ரூ.498.10 இலட்சம் போக மீதமுள்ள தொகையான ரூ.86.90 இலட்சத்தில் இதர செலவினங்களும் சேர்த்து தோராய செலவினமாக ரூ.90.00 இலட்சம் செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

TUFIDCO நிறுவனம் அனுமதித்துள்ள வட்டியில்லா கடன் தொகை ரூ.498.10 இலட்சம் போக மீதமுள்ள தொகை தோராய செலவினமாக ரூ.90.00 இலட்சம் இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1377 /2018/இ1

**நகரமன்ற தீர்மான எண். 610 நாள்.31.12.2018**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

**ஓம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்**
**ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்**
**மறைமலைநகர் நகராட்சி**

**//உண்மை நகல்//**

**மேலாளர்**
**மறைமலைநகர் நகராட்சி**

**மறைமலைநகர் நகராட்சியில் 31.12.2018–ந் தேதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.**

## பொருள் எண்.03

மறைமலைநகர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட இடங்களில் CSR திட்டத்தின் மூலம் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க வேண்டிய இடங்களில் நகராட்சி மூலம் ஆழ்துளை கிணறு மற்றும் மின்மோட்டார் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. வார்டு எண்.5 தாயுமானவர் தெரு மார்கெட் பகுதி
2. வார்டு எண்.6 வள்ளல் குமணன் தெரு ரேஷன் கடை அருகில்
3. வார்டு எண்.7 கம்பர் சாலை
4. வார்டு எண்.7 அண்ணா சமுதாய கூடம், மறைமலைநகர்

**அலுவலக குறிப்பு :**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண். 611 நாள்.31.12.2018**
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஓம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் **31.12.2018**—ந் தேதி திங்கட்கிழமை மாலை **3.00** மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.

## பொருள் எண்.04

மறைமலைநகர் நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் **2011—12**ஆம் ஆண்டு முதல் **2017—18**ஆம் ஆண்டு வரை பிடித்தம் செய்யப்பட்டு சேமநலநிதி சந்தா தொகை அரசு கணக்கில் செலுத்தப்பட்டு வந்தமைக்கு சேமநலநிதி சந்தா தொகை மீது கருவூலத்தில் வட்டி பெற வட்டி கணக்கீடு செய்து உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை, காஞ்சிபுரம் அவர்களுக்கு அனுப்பவும், மேலும் மேற்படி ஆண்டிற்கு தனிநபர் கணக்கின் மீது வட்டி பிரேரணை தயார் செய்யவும், தோராய செலவினம் ரூ.1.75 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு :
மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண்.4498/2018/எச்1

நகரமன்ற தீர்மான எண். 612 நாள்.31.12.2018
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஒம்/—ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 31.12.2018–ந் தேதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.**

## பொருள் எண்.05

மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 2018–19ம் ஆண்டு பொது நிதியில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.3 ஐஸ்வர்யா நகர், பாரதியார் தெரு மற்றும் உடையார் தெருவிற்கு சிமெண்ட சாலை அமைத்தல் | 10.00 |
| 2 | வார்டு எண்.3,4 மற்றும் 7 திருவள்ளுவர் பூங்கா, அண்ணா பூங்கா, பெரியார் பூங்கா, இந்திரா காந்தி பூங்கா மற்றும் கண்ணதாசன் பூங்கா ஆகிய இடங்களில் விளையாட்டு சாதனங்கள், மின் அலங்கார விளக்குகள் மற்றும் பசுமை நிறைந்த பகுதிகளை சீரமைத்தல் பணி | 10.00 |
| 3 | வார்டு எண்.3 சப்டாங்குளம் திறந்தவெளி கிணற்றில் நீர்மூழ்கி மோட்டார் பொருத்தி மேல்மூடி அமைத்தல் பணி | 3.50 |
| 4 | வார்டு எண்.9 கரும்பூர் பகுதிக்கு புதிய திறந்தவெளி கிணறு, பம்ப் அறை மற்றும் மின்மோட்டார் பொருத்துதல் பணி | 13.00 |

அலுவலக குறிப்பு :
மன்றம் அனுமதி வழங்கலாம்.

நகரமன்ற தீர்மான எண். 613 நாள்.31.12.2018
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஓம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் 31.12.2018–ந் தேதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.

## பொருள் எண்.06

மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 2018–19ம் ஆண்டு பொது நிதியில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 முதல் 10 வரையுள்ள பகுதிகளுக்கு LED தெருமின்விளக்குகளுக்குறிய உதிரி பாகங்கள் வாங்குதல் பணி | 9.10 |
| 2 | வார்டு எண்.11 முதல் 21 வரையுள்ள பகுதிகளுக்கு LED தெருமின்விளக்குகளுக்குறிய உதிரி பாகங்கள் வாங்குதல் பணி | 9.40 |

**அலுவலக குறிப்பு : -**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண். 614 நாள்.31.12.2018**
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஒம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 31.12.2018–ந் தேதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.**

## பொருள் எண்.07

மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வீடுகளுக்கும் வீட்டு இணைப்பு வழங்கி குடிநீர் வழங்கும் வண்ணம் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தபட உள்ளது. இதற்கு ஏதுவாக பகிர்மான குழாய்கள் குறைவாக உள்ள பகுதிகளில் குழாய்கள் பதிக்கவும் குழாய்கள் இல்லாத பகுதிகளில் புதியதாக புதைத்து குடிநீர் வழங்கவும் வார்டு எண்.1 முதல் 21 வரையுள்ள பகுதிகளுக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண்.1 வல்லாஞ்சேரி வேம்புலியம்மன் கோயில் பகுதியில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் குடிநீர் விநியோக மண்டல பகுதியின் குடிநீர் பிரதான பகீர்மான குழாய் மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கு புதிதாக பகீர்மான குழாய் அமைத்தல் பணி. | 7.80 |
| 2 | வார்டு எண்.1 விக்னராஜபுரம் 1.00 இலட்சம் லிட்டர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் குடிநீர் விநியோக மண்டல பகுதியின் குடிநீர் பிரதான பகீர்மான குழாய் மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கு புதிதாக பகீர்மான குழாய் அமைத்தல் பணி. | 7.00 |
| 3 | வார்டு எண்.1 மேற்கு பொத்தேரி 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் விநியோக மண்டல பகுதியின் பிரதான பகீர்மான குழாய் அமைத்தல் பணி. | 5.50 |
| 4 | வார்டு எண்.2 இரயில் நகர் முருகன் கோயில் பகுதியின் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் குடிநீர் விநியோக மண்டல பகுதியின் குடிநீர் பிரதான பி.வி.சி பகீர்மான குழாய் மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கு புதிதாக பகீர்மான குழாய் அமைத்தல் பணி. | 9.40 |
| 5 | வார்டு எண்.2 மேட்டு தெரு பகுதியின் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் குடிநீர் விநியோக மண்டல பகுதியின் குடிநீர் பிரதான பி.வி.சி பகீர்மான குழாய் அமைத்தல் பணி. | 5.50 |
| 6 | வார்டு எண்.2 இரயில் நகர் முருகன் கோயில் பகுதியின் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் குடிநீர் விநியோக மண்டல பகுதியின் விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் பகீர்மான குழாய் அமைத்தல் பணி. | 8.00 |
| 7 | வார்டு எண்.3 காந்திநகர் 3–வது பகுதியில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் குடிநீர் விநியோக மண்டல பகுதியின் குடிநீர் பகீர்மான பிரதான குழாய் அமைத்தல் பணி. | 5.50 |

| | | |
|---|---|---|
| 8 | வார்டு எண்.3 ஐஸ்வர்யா நகர் பகுதியில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் குடிநீர் விநியோக மண்டல பகுதியின் குடிநீர் பிரதான பகிர்மான குழாய் மற்றும் விடுபட்ட பகுதிகளுக்கு குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் பணி. | 9.50 |
| 9 | வார்டு எண்.3 ஐஸ்வர்யா நகர் பகுதியின் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் குடிநீர் மண்டல விநியோக பகிர்மான குழாய் விடுபட்ட பகுதிகளில் அமைத்தல் பணி.(செந்தில் நகர்) | 9.80 |
| 10 | வார்டு எண்.3 டவுன் சென்டர் பகுதியின் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் குடிநீர் மண்டல விநியோக பகுதியின்பிரதான பகிர்மான குழாய் அமைத்தல் பணி. | 5.50 |
| 11 | வார்டு எண்.4 அடிகளார் சாலை பகுதியின் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் குடிநீர் மண்டல விநியோக பகுதியின்பிரதான பகிர்மான குழாய் அமைத்தல் பணி. | 5.10 |
| 12 | வார்டு எண்.6 குமணன் தெரு பகுதியின் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் குடிநீர் மண்டல விநியோக பகுதியின்பிரதான பகிர்மான குழாய் மற்றும் பகிர்மான குழாய் அமைத்தல் பணி. | 6.50 |
| 13 | வார்டு எண்.7 எம்.ஜி.ஆர் பேருந்து நிலையம் அருகே 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் குடிநீர் மண்டல விநியோக பகுதியின்பிரதான பகிர்மான குழாய் அமைத்தல் பணி. | 5.30 |
| 14 | வார்டு எண்.09 களிவந்தப்பட்டு பகுதியின் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோக மண்டல பிரதான பகிர்மான குழாய் அமைத்தல் பணி. | 5.30 |
| 15 | வார்டு எண்.09 அன்னை அவன்யூ பகுதியில் கூடலுர் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் குடிநீர் விநியோக மண்டல பிரதான பகிர்மான குழாய் மற்றும் பகிர்மான குழாய் அமைத்தல் பணி. | 10.00 |
| 16 | வார்டு எண்.10 கோவிந்தாபுரம் பகுதியின் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோக மண்டல பிரதான பகிர்மான குழாய் மற்றும் விடுபட்ட பகுதிகளில் பகிர்மான குழாய் அமைத்தல் பணி. | 10.00 |
| 17 | வார்டு எண்.10 கோவிந்தாபுரம் பிள்ளையார் கோயில் தெரு பகுதியின் 0.30 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் | 4.90 |

| | | |
|---|---|---|
| | விநியோக மண்டல பிரதான பகீர்மான குழாய் மற்றும் விடுபட்ட பகுதிகளில் பகீர்மான குழாய் அமைத்தல் பணி. | |
| 18 | வார்டு எண்.11 ஸ்ரீவாரி நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெருவிற்கு பகிர்மான குழாய் அமைத்தல். | 10.00 |
| 19 | வார்டு எண்.11 செங்குன்றம் காந்தி தெரு 1 முதல் 3வது குறுக்கு தெரு, திருமலை நகர் மற்றும் வரதராஜ கோயில் தெருக்களுக்கு PVC பகிர்மான குழாய் அமைத்தல். | 5.10 |
| 20 | வார்டு எண்.12 கிழக்கரணை மாரியம்மன் கோயில் தெரு, அலகாத்தம்மன் கோயில் தெரு மற்றும் காமராஜர் சாலை (பகுதி) பகுதிக்கு PVC பகிர்மான குழாய் அமைத்தல். | 2.80 |
| 21 | வார்டு எண்.13 மலைகோயில் 1 முதல் 4வது குறுக்கு தெரு மற்றும் ஈஸ்வரன் நகர் 1 முதுல் 3வது குறுக்கு தெரு பகுதிக்கு PVC பகிர்மான குழாய் அமைத்தல். | 2.30 |
| 22 | வார்டு எண்.15 கணபதி சிண்டிகேட் மற்றும் கணபதி சின்டிகேட் இணைப்பு 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு குடிநீர் விநியோக மண்டல பகுதியின் குடிநீர் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் அமைத்தல். | 10.00 |
| 23 | வார்டு எண்.17 பள்ளிக்கூடத் தெரு, பிள்ளையார் கோயில் குறுக்கு தெரு, கணேஷ் நகர், ஆர்.எம்.ஆர் அவென்யூ, கருமான் குட்டை ஆகிய பகுதிகளில் PVC பகிர்மான குழாய் அமைத்தல். | 3.80 |
| 24 | வார்டு எண்.17 சஞ்சீவி நகர் மற்றும் செந்தமிழ் நகர் மெயின் ரோடு மற்றும் குறுக்கு தெரு பகுதிக்கு குடிநீர் பிரதான குழாய் அமைத்தல். | 10.00 |
| 25 | வார்டு எண்.19 தேவிபிரசாந்த் நகர், விக்னேஷ்வரா நகர், கலைமகள் நகர், தேவேந்திரர் நகர் ஆகிய பகுதிகளுக்கு PVC பகிர்மான குழாய் அமைத்தல் . | 5.30 |
| 26 | வார்டு எண்.19 நின்னக்கரை கலைமகள் நகர், மூகாம்பிகை நகர் பகுதிக்கு குடிநீர் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் அமைத்தல் . | 8.60 |
| 27 | வார்டு எண்.20 மேற்கு பொத்தேரி அப்துல்கலாம் தெரு, இளங்கோவடிகள் தெரு, பராசக்தி நகர், ஔவையார் தெரு, அன்னை தெரசா தெரு ஆகிய பகுதியில் குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் மற்றும் மயான சாலை இணைப்பு சாலைக்கு பகிர்மான குழாய் அமைத்தல் . | 4.00 |
| 28 | வார்டு எண்.21 சண்முக பிரியா நகர், ஆதிபராசக்தி நகர் மற்றும் அல்லி நகர் பகுதிக்கு குடிநீர் பிரதான குழாய் மற்றும் பகிர்மான குழாய் அமைத்தல். | 9.00 |
| 29 | வார்டு எண்.21 சாமுண்டீஸ்வரி நகர், விக்னேஷ்வரா நகர், கலைமகள் நகர், தேவேந்திரன் நகர் ஆகிய பகுதிகளுக்கு PVC பகிர்மான குழாய் அமைத்தல். | 5.00 |

| | | |
|---|---|---|
| 30 | வார்டு எண்.21 நீஞ்சிலியம்மன் கோயில் தெரு, பஜனை கோயில் தெரு, பாரதியார் தெரு, அண்னை இந்திரா காந்தி தெரு, அம்பேத்கார் தெரு 1வது, 2வது தெரு மற்றும் அண்னை தெரேசா குறுக்கு தெருவிற்கு குடிநீர் பிரதான குழாய் அமைத்தல். | 7.90 |
| 31 | வார்டு எண்.8 முதல் 14 வரையிலான பகுதிகளில் 14 இடங்களில் இயங்கிவரும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் (RO Machines) –ல் உள்ள (Membrance) மாற்றி அமைத்தல் பணி | 9.50 |
| 32 | வார்டு எண்.8 முதல் 14 பகுதிகளில் 6 இடங்களில் உள்ள சுத்திகரிப்பு நிலையங்களில் (RO Machines) –ல் உள்ள High Pressure Pump ) மாற்றி அமைத்தல் பணி | 7.60 |
| 33 | வார்டு எண்.8 முதல் 14 வரையிலான பகுதிகளில் CSR திட்டத்தின் மூலம் அமைக்கப்படவிருக்கும் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு 6 இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல் பணி | 9.90 |

**அலுவலக குறிப்பு :**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண். 615 நாள்.31.12.2018**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஒம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் 31.12.2018–ந் தேதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.

## பொருள் எண்.08

மறைமலைநகர் நகராட்சி பகுதியானது 21 வார்டுகளை உள்ளடக்கி 58.08 சதுர கி.மீ கொண்ட சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகரட்சியின் மக்கள் தொகை 2011–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 81361 எண்ணிக்கை கொண்டுள்ளது. மொத்தமுள்ள 21 வார்டுகளில் உள்ள எல்லைகளின் வரையறை (Ward Delimitation) பணியின் அவசியம் கருதி ஆய்வு கூட்டம், அரசு கூட்ட நடவடிக்கைகளுக்கு அறிக்கைகள் தயார் செய்வது போன்ற பணிகள் இன்றியமையாததாகும் என்ற காரணத்தினால் கீழ்கண்டுள்ளவாறு அறிக்கைகள் தயார் செய்யப்பட்டது.

1. Auto Cad Working Designing and Re-Working for 21 wards
2. Paper Size word Map print out (A0,A1,A2 Colour Print)
3. Delimitation Booklet
4. A4 Colour Printout
5. A3 Colour Printout
6. A4 Black & White Printout
7. A3 Black & White Printout
8. Soft Binding
9. Typing English & Tamil.

மேற்கண்ட அறிக்கை பணிகளானது வார்டு எல்லை வரையறை பணிகள் துவங்கிய ஜனவரி 2018 முதல் நடப்பு காலம் வரையில் ஏறத்தாழ 12 மாதங்களில் மேற்கொண்ட பணிகளாகும். எனவே மேற்கண்ட பணிகள் அனைத்தும் பணியின் அவசியம் கருதி அறிக்கைகள் தயார் செய்யப்பட்டுள்ளதால் இதுவரையில் தொகை ரூ.4.00 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. எனவே பணியின் அவசியம் கருதி மேற்படியான பணிகள் மேற்கொண்ட Super Multi Colour Xerox அவர்களுக்கு பட்டியல் தொகையினை பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:—
மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2737/2017/அ1

நகரமன்ற தீர்மான எண். 616 நாள்.31.12.2018
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஒம்/—ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 31.12.2018–ந் தேதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.**

## பொருள் எண்.09

பொது சுகாதார பிரிவு இந்நகராட்சிப் பகுதியில் உள்ள வார்டு எண்.1 முதல் 21 வரையிலுள்ள பகுதிகளில் திடக்கழிவு அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் துப்புரவு பணியாளர்களுக்கு 2017–18–ம் ஆண்டிற்குரிய சீருடைகளை வாங்கித்தருவதற்கும், இப்பணி தொடர்பாக Co-optex show room, Chengalpet அவர்களிடமிருந்து உரிய விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

இப்பட்டியலின்படி இப்பணியினை மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.99843/– (ரூபாய் தொன்னூற்றி ஒன்பதாயிரத்து எண்ணூற்றி நாற்பத்தி மூன்று மட்டும்) செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
மன்றம் அனுமதிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண். 617 நாள்.31.12.2018**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஒம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் **31.12.2018**–ந் தேதி திங்கட்கிழமை மாலை **3.00** மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.

## பொருள் எண்.10

மறைமலைநகர் நகராட்சியில் வார்டு எண்.**1** முதல் **21** வரையிலான பகுதிகளில் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணியில் ஈடுபட தேவையான 85 DBC பணியாளர்கள் திருவா. கண்ஸ்ட்ரானிக் இந்தியா நிறுவனம் சப்ளை செய்வதற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நீட்டிப்பு காலம் **31.12.2018** அன்று முடிவடைவதால் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணி தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அவசர அவசியம் செய்து திருவா. கன்ஸ்ட்ரானிக் இந்தியா நிறுவனமே தொடர்ந்து இப்பணிக்கு 85 DBC பணியாளர்களை சப்ளை செய்திட **01.01.2019** முதல் **31.01.2019** வரை ஒரு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய உத்திரவு வழங்கிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.**8.00** இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | மொத்த பணியாளர் எண்ணிக்கை | 85 |
| 2 | ஒரு நபருக்கு ரூ.320/– வீதம் மொத்தம் ஒரு மாத காலத்திற்கு | ரூ.6,80,000/– |
| 3 | ESI, EPF 10% | ரூ.68,000/– |
| 4 | GST 12% | ரூ.81,600 |
| | மொத்தம் | **ரூ.8,29,600/–** |

**அலுவலகக் குறிப்பு:–**
மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1878/2018/எச்1

**நகரமன்ற தீர்மான எண். 618 நாள்.31.12.2018**
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஓம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 31.12.2018–ந் தேதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.**

## பொருள் எண்.11

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்பத்தூர் அவர்களுக்கு 2018–19ஆம் ஆண்டிற்கான பங்களிப்பு தொகை சிறப்பு நிலை நகராட்சிக்கு ரூ.1,50,000/– செலுத்த இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி மற்றும் ஆய்வு மையம் கோயம்பத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.848/2018/அ2 நாள்.18.12.2018–ன்படியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் செங்கல்பட்டு அவர்களின் கடிதம் ந.க.எண்.131/2018/அ1 நாள்.21.12.2018–ன்படியும் நகராட்சி பங்களிப்பு தொகை ரூ.1,50,000/– செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.4915/2018/சி1

**நகரமன்ற தீர்மான எண். 619 நாள்.31.12.2018**
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஒம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் **31.12.2018**–ந் தேதி திங்கட்கிழமை மாலை **3.00** மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.

## பொருள் எண்.12

2018–19ம் ஆண்டிற்கு இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு மறைமலைநகர் நகராட்சியின் சார்பாக ஆண்டு சந்தா ரூ.2500/– ஐ செலுத்த மாவட்ட செயலாளர், இந்திய செஞ்சிலுவை சங்கம் காஞ்சிபுரம் அவர்களின் 02.12.2018–ந் தேதிய கடிதத்தின்படியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு அவர்களின் கடித ந.க.எண்.440/2015/அ4 நாள்.12.12.2018–ன்படி இந்திய செஞ்சிலுவை சங்கத்திற்கு ஆண்டு சந்தா தொகை ரூ.2500/–ஐ செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**
மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.1935/2018/சி1

**நகரமன்ற தீர்மான எண். 620 நாள்.31.12.2018**
**அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.**

ஓம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் 31.12.2018—ந் தேதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.

## பொருள் எண்.13

மறைமலைநகர் நகராட்சியில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் 2011—12ஆம் ஆண்டு முதல் 2017—18ஆம் ஆண்டு வரை பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதி மீதான வட்டி கணக்கீடு செய்து தர பெறப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | குறிப்பிட்டுள்ள தொகை ரூ. |
|---|---|---|
| 1 | ராஜ்ரேவ் சாப்ட் சிஸ்டம்ஸ், நெ.2 முத்தையாள் ரெட்டி நகர், 3வது தெரு, ஆதம்பாக்கம், சென்னை—88 | 157600/— |
| 2 | எண். டெக் சொலுயூஷன்ஸ், நெ.10 கௌதமர் தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை—59 | 165200/— |
| 3 | வெங்கட் ஈவென்ட்ஸ், நெ.13 வேல்நகர் விரிவாக்கம் ஆதம்பாக்கம், சென்னை—88 | 172320/— |

அலுவலக குறிப்பு :

குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள திருவா. ராஜ்ரேவ், சாப்ட் சிஸ்டம்ஸ் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.4498/2018/பி2

நகரமன்ற தீர்மான எண். 621 நாள்.31.12.2018

அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஒம்/—ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் 31.12.2018–ந் தேதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.

## பொருள் எண்.14

மறைமலைநகர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் சொத்துவரி, குடிநீர் கட்டணம் மற்றும் தொழில்வரி இனங்களை நிலுவையின்றி வசூல் செய்யும் பொருட்டு பலமுறை அறிவிப்பு கடிதங்கள் வழங்கப்பட்டும், நேரிலும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டும் நிலுவை வரித்தொகையினை இதுநாள்வரையில் செலுத்தாமலும் கால அவகாசம் கோரியும் காலம் தாழ்த்தி வருகின்றனர். எனவே பொதுமக்களுக்கு தெரிவிக்கும் வகையில் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யும், வரிவிதிப்புதாரர்களுக்கு துண்டு பிரசுரம் அச்சடித்தும், உள்ளூர் கேபிள் தொலைகாட்சியில் விளம்பர பலகை வைத்திடவும் வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு மற்றும் நீதி மன்றம் மூலம் வழக்கு தொடர ஆகும் தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிது.

அலுவலகக் குறிப்பு:–
மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3097/2018/அ1)

நகரமன்ற தீர்மான எண். 622 நாள்.31.12.2018
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஓம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

**மறைமலைநகர் நகராட்சியில் 31.12.2018–ந் தேதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.**

பொருள் எண்.15

மறைமலைநகர் நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளில் சொத்துவரி, குடிநீர் கட்டணம் மற்றும் தொழில்வரி இனங்களை 15.03.2018–க்குள் 100 சதவீதம் வசூல் செய்யும் பொருட்டு பலமுறை அறிவிப்பு கடிதங்கள் வழங்கப்படும் நேரிலும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நிலுவை வரித்தொகையினை இதுநாள் வரையில் செலுத்தாமலும் கால அவகாசம் கோரியும் காலம் தாழ்த்தி வருகின்றனர் எனவே பொதுமக்கள் தாங்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவைத் தொகை அறியும் வகையில் Bulk Sms அனுப்பிட ஆகும் தோராய செலவினம் ரூ.75,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.3097/2018/அ1)

**நகரமன்ற தீர்மான எண். 623 நாள்.31.12.2018**
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஒம்/–ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி

மறைமலைநகர் நகராட்சியில் 31.12.2018–ந் தேதி திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்ற நகர் மன்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான விவரம்.

## பொருள் எண்.16

மறைமலைநகர் நகராட்சி பொது நிதி 2018–19ன் கீழ் 07.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளுக்கு கலம் எண்.4–ல் உள்ளவாறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி தேதியில் வரபெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்கண்டுள்ளவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலையின் விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) | நிர்வாக அனுமதி வழங் கப் பட்ட தீர்மான எண் மற்றும் நாள் | ஒப்பந்ததாரர் பெயர் (திருவாளர்கள்) | விலை விகிதம் | | குறைந்த ஒப்பந்தப்புள்ளி தாரர் பெயர் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | அதிகம் | குறைவு | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 1 | வார்டு எண்.4 திருவள்ளுவர் சாலை, எம்.ஜி.ஆர் சாலை சந்திப்பு மற்றும் வள்ளல் அதியமான தெரு சந்திப்பில் சிறுபாலம் அமைத்தல் பணி மற்றும் வார்டு எண்.6 பாவேந்தோ் சாலை மற்றும் அண்ணா சாலை சந்திப்பில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் உயர்த்தி மூடு பலகை அமைக்கும் பணி. | 9.20 | 538/ 26.10.2018 | எஸ்.வி.ஜே எண்டர்பிரைசஸ் | – | 0.05% | எஸ்.வி. ஜே எண்டர்பிரைசஸ் |
| | | | | டி. உதயசங்கர் | 1.18% | – | |
| 2 | வார்டு எண்.6 ஜி.எஸ்.டி சாலை மற்றும் அண்ணா சாலை சந்திப்பில் பழுதடைந்துள்ள சாலையினை சீரமைத்தல் பணி வார்டு எண்.7 அண்ணா சாலை பெரியார் சாலை சந்திப்பில் உள்ள உயர்மின் விளக்கை சுற்று பாதுகாப்பு சுவர் அமைத்தல் பணி. | 4.00 | 538/ 26.10.2018 | டி.எஸ்.ஆர் சன்ஸ் இந்தியா இன்ஜினியர் (பி) லிட் | – | 0.0003% | டி.எஸ்.ஆர் சன்ஸ் இந்தியா இன்ஜினியர் (பி) லிட் |
| | | | | எஸ். கோகுலகிருஷ்ணன் | 5.00% | – | |
| 3 | வார்டு எண்.8 கூடலூர் நவீன எரிவாயு தகன மேடைக்கு | 9.50 | 584/ 22.11.2 | எம்.எச்.டி இன்ஜினியரிங் | – | 0.31% | எம்.எச்.டி இன்ஜினி |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தேவையான விறகுகள் சப்ளை செய்தல் மற்றும் இயந்திரம் இயக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்கள் சப்ளை செய்தல் பணி | | 018 | எஸ்.எஸ் இன்ஜினியரிங் | 0.47% | – | யரிங் |
| 4 | வார்டு எண்.14 திருக்கச்சூர் வில்லியர் காலனி பகுதியில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து PVC தண்ணீர் தொட்டி மூலம் குடிநீர் வசதி செய்து தருதல் பணி மற்றும் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து இந்தியா மார்க் II கைபம்பு அமைத்தல் பணி. | 3.40 | 587/ 22.11.2 018 | ஸ்ரீ சாய் எஸ்.எம்.கே எண்டர்பிரைசஸ் | – | 0.02% | ஸ்ரீ சாய் எஸ்.எம். கே எண்டர்பி ரைசஸ் |
| | | | | டி.ஜி.வி. இன்ஜினியர்ஸ் | 0.68% | – | |
| 5 | வார்டு எண்.14 திருக்கச்சூர் வில்லியர் காலனி பகுதிக்கு சிமெண்ட் காண்கீரிட் சாலை அமைத்தல் பணி | 5.30 | 587/ 22.11.2 018 | பி.குமார் | 0.14% | – | எஸ்.எஸ். எஸ் எண்டர்பி ரைசஸ் |
| | | | | எஸ்.எஸ். எஸ்எண்டர்பிரை சஸ் | – | 0.02% | |
| 6 | மறைமலைநகர் நகராட்சி பகுதியில் அடிகளார் சாலையில் அமைந்துள்ள நகராட்சி பழைய கட்டிடத்தில் இயங்கி வரும் இ–சேவை மையத்தின் தரையை சீரமைக்க தேவையான டைல்ஸ் பதிக்கவும், மின்விசிறி மற்றும் Point-களை ஏற்படுத்தும் பணி | 0.40 | 573/ 22.11.2 018 | எஸ். உமாராணி | மதிப்பீட்டு தொகைக்கு | | எஸ். உமாரா ணி |
| | | | | ஸ்ரீ சாய் எஸ்.எம்.கே எண்டர்பிரைசஸ் | 0.10% | – | |
| 7 | மறைமலைநகர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் வெள்ள பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் உடன் நிவாரணங்களை மேற்கொள்ள பாதுகாப்பு கவசங்கள் மற்றும் கூடுதலாக இரண்டு மரம் அறுக்கும் கருவி (Power Saw) கொள்ளுமுதல் செய்யும் பணி | 2.50 | 574/ 22.11.2 018 | எஸ். உமாராணி | மதிப்பீட்டு தொகைக்கு | | எஸ். உமாராணி |
| | | | | ஸ்ரீ சாய் எஸ்.எம்.கே எண்டர்பிரைசஸ் | 1.98% | – | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | மறைமலைநகர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4–ல் அமைந்துளள வள்ளல் எம்.ஜி.ஆர் சாலை தென் பகுதியில் அண்ணா சாலை சந்திப்பு முதல் வடபகுதியில் தொல்காப்பியர் தெரு வரை அடிகளார் சாலை சந்திப்பிலுள்ள சிறுபாலம் முதல் அம்மா உணவகம் வரை, NHAI சாலை சந்திப்பு முதல் அடிகளார் சாலை முகப்பு பகுதி வரை, பேருந்து நிறுத்தம் பின்புறம், வள்ளல் சீதகாதி தெரு முதல் ஜூனியர் குப்பண்ணா உணவகத்தின் முன்பு வரை பழுதடைந்த சாலைகள் சீர் செய்தல் பணி | 2.10 | 582/ 22.11.2018 | டி.எஸ்.ஆர் சன்ஸ் இந்தியா இன்ஜினியர் (பி) லிட் | மதிப்பீட்டு தொகைக்கு | | டி.எஸ்.ஆர் சன்ஸ் இந்தியா இன்ஜினியர் (பி) லிட் |
| | | | | எஸ். கோகுலகிருஷ்ணன் | 5.00% | – | |
| 9 | மறைமலைநகர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18–ல் காட்டாங்கொளத்தூர் பகுதியில் 50அடி வட்டம் கொண்ட கிணறு எடுக்கப்பட்டு அதில் இருந்து வார்டு எண்.3,4,5 பகுதிகளுக்கு குடிநீர் பகிர்மான குழாய் மூலம் வழங்கும் பொருட்டு குடிநீர் பிரதான குழாய், மின்மோட்டர்கள் மற்றும் இதர பணிகள் செய்து பணி உத்திரவு வழங்கப்பட்ட பணிகள் நடைபெற்று வரும் நிலையில் இந்த பிரதான குழாய் ரயில்வே லைனின் குறுக்கே கடந்து செல்ல வேண்டியுள்ளதால் ரயில்வே சாலையில் உரிய அனுமதி பெற்று அவர்கள் வழங்கிய அனுமதியின் கீழ் 250 mm Pipe அமைத்து இதன் உட்புறம் குடிநீர் பிரதான குழாய் அமைத்திட மற்ற பகுதியில் அமைப்பது போல் இந்த பணி Trenchless Technology மூலம் மேற்கொள்ளுதல். | 8.50 | 578/ 22.11.2018 | இ. சண்முகம் | மதிப்பீட்டு தொகைக்கு | | இ. சண்முகம் |
| | | | | ராதா எலக்ட்ரிக்கல்ஸ் | 0.07% | – | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 10 | வார்டு எண்.15 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு (RO Membrane) மாற்றி அமைத்தல் பணி | 10.00 | 558/ 26.10.2 018 | டி.ஜி.வி இன்ஜினியர்ஸ் | – | 0.17% | டி.ஜி.வி இன்ஜினி யர்ஸ் |
| | | | | ஸ்ரீ சாய் எஸ்.எம்.கே எண்டர்பிரைசஸ் | 0.17% | – | |
| 11 | வார்டு எண்.2 விஷ்ணுபிரியா நகர் பகுதிக்கு ஒரு ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி அதிலிருந்து விஷ்ணுபிரியா நகர் 1,2,3,4 ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் பணி | 1.60 | 485/ 10.09.2 018 | ஸ்டார் எலக்ட்ரிக்கல்ஸ் | 0.31% | – | குமரன் எலக்ட்ரிக் கல்ஸ் |
| | | | | குமரன் எலக்ட்ரிக்கல்ஸ் | – | 0.03% | |

அலுவலக குறிப்பு:

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**நகரமன்ற தீர்மான எண். 624 நாள்.31.12.2018**
அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

ஒம்/—ப.மு.நெ.முஜிபுர் ரஹ்மான்
ஆணையாளர் மற்றும் தனிஅலுவலர்
மறைமலைநகர் நகராட்சி

//உண்மை நகல்//

மேலாளர்
மறைமலைநகர் நகராட்சி